கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௫. } பிரமாதீச ௵ சித்திரை௴ { பகுதி ௧

## நாட்டுக்கோட்டை வணிக மணிகளுக் கோர் விஞ்ஞாபனம்.

செல்வப் பெருக்கமும், சிவநேயமும், ஈகையும், ஏனைய பல நற்குணங்களும் பொருந்திச் செந்தமிழ் நாட்டை அலங்கரித்து விளங்கும் பெருமையாளராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்க்கு இச்சமையம் யாம் கூறும் விஞ்ஞாபன மொன்றுள்ளது. வணிக மணிகளே! இவ்வுலகில் வாழும் தமிழ் மக்களுள்ளே பொருளீட்டுதலாலும், அதிலும் தர்மஞ் செய்தலாலும் திருப்பணி கும்பாபிஷேகம் பசுமடம் திருநந்தனவனம் அன்னசத்திரம் வேதபாடசாலை முதலிய பற்பல அறச்செயல்களை மேற்கொண்டொழுகுதலாலும் சிறந்தவர்கள் தங்கள் குலத்தவர்களேயென்பதும், சைவசமையம் தற்காலத்தில் சிறப்புற்று நிலவுவது தங்கள் வகுப்பாராலேயே யென்பதும் யாவரும் அறிவர். உங்களைப்போன்று சமயாபிமானம், ஜாதியபிமானம், பாஷாபிமானம், தருமாபிமானங் கொண்டவர்கள் வேறு எந்தச் சாதியிலு மில்லையென்று நிச்சயமாகக் கூறலாம். இத்தகைய உத்தம குணஞ்செயல்களாற்றான் உங்கள் செல்வம் முன்னேற்றம் பெற்றுப் பூர்வ பக்கசந்திரன் போல வளர்கின்றது. உத்தமமாகிய புண்ணியங்களைச் செய்து "ஈதலறம்" எனவும், "அறத்தான் வருவதேயின்பம்" எனவும் கூறிய பேரருளாளர் திருவாக்குகளின்படி பொருளாற் பெறத்தக்க அறத்தையும், அறத்தாற் பெறு

தக்க இன்பத்தையும் ஒருங்கே பெற்று வாழ்கின்ற பெருந்தவமுடைய வர்கள் நீங்களேயன்றோ? சிவநேயச்செல்வர்களே!

நீங்கள் அன்புடன் செய்யும் சிவாலயத்திருப்பணிகளெங்கும் பார்த்தாலும் விளங்குகின்றன. ஆயினும் தேவாரதிபாடல் பெற்ற ஸ்தலங்களையே விரும்புகின்றீர்கள். இதனால் தமிழ் வேதப்பற்று மிக்குள்ளீர்களென்பது தெளிவாம். இப்பெரும் புண்ணியத்தால் சகல ஐஸ்வரியங்களுடன் புத்திரசம்பத்தும் மக்கட்குக் கல்விப்பேறும் வரப் பெறுகின்றீர்கள். கடந்த 4 வருஷங்களுள் எத்தனையோ கலாசாலைகளையும் சபைகளையும் ஸ்தாபித்து கல்வியை வளர்க்கின்றீர்கள். நம்மவரில் பலர் உபந்யாசவல்லுநராயினர். இங்ஙனம் தமிழருமை யுணர்ந்த நீங்களே தமிழ்த்தேவியின் புண்ணியப் புதல்வரெனற்கு யாது தடையுளது?

தற்காலம் நீங்கள் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதாவது: உங்கள் வகுப்பாருக்கெல்லாம் பொதுவான ஒரு நகரத்தில் ஒரு பெரிய கலாசாலையும் சபையும் ஏற்படுத்தி நன்கு கற்ற சம்ஸ்கிருத பண்டிதர்களையும் தமிழ்ப்பண்டிதர்களையும் கூட்டிவைத்து இதுவரை வெளிப்படாத சிவாகமங்கள் புராணங்கள் முதலியவற்றை வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுவித்து உலகெங்கும் பரப்பவேண்டும். இங்ஙனம் செய்ய நீங்கள் முன் வந்தாலன்றி வேறுயாராலும் ஆகாது. இந்தக் காரியத்தை நீங்கள் செய்து முடித்தால் தமிழ்த் தேவிக்கு எண்ணிறந்த ஆடை ஆபரணாதிகளும் கோயில்களும் திருவிழாவும் செய்த பேறு பெற்றவராவீர்கள்.

நமது சைவமதமும் அஸ்திவார பலம் பெற்று என்றும் அழியாத பெரும் புகழ்பெறும். நமது பாஷை, மதம், ஆசாரம், பக்தி, தருமம் ஆகிய இவை போல்வனவெல்லாம் நம்மவரிடம் வேரூன்றி வளரும். மேற் கூறியவாறு செய்தாலன்றி வரவர நமது சமய [illegible]ஷையும் பிறவொழுக்கங்களும் குன்றுவனவாகும். கிறிஸ்[illegible]த்தைப் பாதிரிகள் எவ்வளவு தூரம் பரப்புகின்றார்கள்? ஒவ்[illegible]ணிகர்கள் கோடிக் கணக்கான திரவியத்தை அவர்கள் மதா[illegible]பினிமித்தம் தத்தஞ் செய்கின்றனர். இவர்கள் செயலை

நாட்டுக்கோட்டை வணிகமணிகளுக்கோர் விஞ்ஞாபனம். நீ

நேரிற் கண்டிருந்தும் நாம் நமது சமய வளர்ச்சியையும் பாஷை வளர்ச்சியையும் கருதாதிருப்பது முறையாமா? வைஷ்ணவர்கள் சென்னையிலும் காஞ்சியிலும் ஒரு சங்கம் ஏற்படுத்திச் சில வருஷங்களுக்குள் எத்தனை பெரிய நூல்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்? எத்தனை அரிய பெரிய விஷயங்கள் அச்சங்கத்தாரால் வெளிவந்தன.? எல்லா மதங்களையும் தனக்குள்ளடக்கி சமயவரசாகி விளங்கும் நமது சைவ சமயமட்டும் தாயற்றமகவுபோலத் தத்தளிக்கப் பார்த்திருப்பது நியாயமானதா? இப்பெருங் காரியத்தை மேற்கொண்டு செய்யத் தக்க சிவபுண்ணிய சீலர்கள் உங்களைத் தவிர யாரிருக்கின்றனர்? நீங்கள் மனம் வைத்தால் உங்களில் ஒரு தனிகர் செய்து முடிக்கக் கூடியது தானே? ஆயினும் அங்ஙனம் ஒருவரே செய்வதைப் பார்க்கிலும் உங்கள் சமூகத்தார் எல்லாருக்கும் பொதுவாகவே ஏற்படுத்தினுல் எல்லாருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் ஏற்றதாகி மேன்மேல் வளர்ச்சி யெய்துவதாகும்.

சென்றது கருதாது இனியேனும் சிந்தித்து இதற்கு வேண்டுவன செய்து ஆதியில் தமிழ்ச்சங்க பரிபாலனஞ் செய்து என்றுங் குன்றாப் பெரும் புகழ் படைத்த பாண்டி மன்னர் போலப் புகழும் புண்ணியமும் பெற்று வாழ்வீர்களாக. திருவாலவாயான் றிருவருள் பெறுக.

பத்திராதிபர்.

# தமிழ்வளர்ச்சியும் சபைகளின்கிளர்ச்சியும்.

நற்றுஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்றுஞ் சரக்கன்று காண்.

உலகத்தின்கண் மிகப் புண்ணிய பூமி என்றழைக்கப்பெறும் இப்பரதகண்டத்தின் தென்பாகம் சேர சோழ பாண்டியரென்னும் மூன்று தமிழ் வேந்தர்களால் ஆளப்பெற்றது. அவ்வேந்தர் சிகாமணிகளுக்குள் பண்டையோர் எனப் பொருள்படும் பாண்டியர்களால் பல்லாயிர வருடங்களாக ஆளப்பெற்ற இப்பாண்டிமா மண்டலமே மிக மேன்பாடுடையதாம். ஏனெனில் பரமபதியாகிய சிவபெருமான் தமது அருட் திருவிளையாட்டறுபத்துநான்கினையும் அவ் வெல்லையுட் புரிந்தமையா லென்க.

மேற்கூறிய மும்மண்டலத்தின் கண்ணும் அநாதிகாலந்தொட்டு வழங்கிவரும் மொழி தமிழ்மொழி யொன்றேயாம். அம்மொழியினை நன்கு வளர்ப்பதற்குப் பாண்டியர்களே முச்சங்கம் நிறுவினர். அம்முச்சங்கம் நிலைபெற்று நின்று இத்தமிழகத்துக்குப் புரிந்தபேருபகாரத்திறன் யாம் அளவிட்டுக் கூறற் பாற்றே. முன்னிரு சங்கங்களாற் போந்த நலங்கள் யாவற்றையும் யாம் நுகரப்பெறாமைக்குக் காரணம் அச்சங்கங்களில் நிலவிய நூல்கள் யாவற்றையும் பெரும்பான்மை கடல் கொண்டமையேயாம். பின்,

கடைச்சங்கத்தில் நிலவிய சிற்சில நூல்களும் அவைகளின் வழித்தாய்ப் பின்னர்த் தோன்றிய பலநூல்களுமே நம்தமிழகத்துக்கு உரிய நூல்களெனக் கருதப் பெற்றன. பாண்டியர் மரபு அழியவே தமிழ் மொழியின் உன்னதநிலையும் அழிந்ததாகக் கொள்ளவேண்டியதாயிற்று.

இவ்வாறு நமது தமிழ்மொழி நிலைகுலையவே முன்னமே நம் நாட்டினுட் புகுந்து உன்னதநிலை வாய்க்கப்பெற்ற பிறநிலமாக்கள் தமிழ்நிலத்துள்ளாரைக் கீழ்ப்படுத்தித் தங்கோள் நிறுவமுயன்றன அம்முயற்சி வயப்பட்டுத் தமிழர்கள் தம் கொள்கைகளை அறவே துற

---

* மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் நான்காவது ஆண்டுநிறைவேற்றுவிழாவில் (30—4—13ல் அக்கிராசனாதிபதி யவர்களாற் கூறப்பெற்ற முகவுரை.

ந்து அவர் கொள்கைகளைத் தங் கொள்கைகளாகக் கைக் கொள்வாராக யினர். அம்மட்டோ! தமிழ்மொழி வடமொழியின்கண் ணின்று போந்ததன்றித் தனித்துநிலவும் ஓர் மொழியன்று என்று அவர் கூறு ங் கூற்றினையு முண்மையாகக் கருதினர். அம்மட்டோ! "தமிழ்" என்ற சொல்லே திராவிடம் என்னும் வடமொழிச் சொல்லின் மரூஉ வெனக் கூறி மயங்கினர். "தமிழ்" என்னுமிச்சொல் தமிழ்மொழி க்கே யுரியதாகி "இனிமை" என்னும் பொருள் பயப்பதாய்த் தொ ன்றுதொட்டு தமிழர்களால் வழங்கிவரப்படுவ தொன்றாம். இனிமை ப்பொருள் பயப்ப தெங்ஙனமெனிற் கூறுதும். "தமிழ்" என்னுஞ் சொல்லைப் பகுத்துப்பார்க்கில் தம் + இழ் என்றுபகுக்கப்பெறும். இவ் வசைகளைத் தம்முள் நிலைமாற்றஞ் செய்யில் இழ் + தம் என்று ஆம். இழ் + தம் எனினும் இழுதமெனினும் ஒக்கும். இழுது என்பது தித்திப்பு என்னும் பொருள் தரும். அமிழ்தம் என்னும் மொழியினை யும் இதனோடு உடன்படுத்து ஓர்ந்துகொள்க. இவ்வாறு நிலைமாற் றஞ் செய்யலாமோவெனில் தமிழ் மொழியி லன்றியும் வடமொழியி னுணரும் மிக முக்கியமான வார்த்தைகளை அவ்வாறு நிலைமாற்றிப் பொருள்கொள்ள வைக்குமுறை யறிக. இது நிற்க,

தமக்குரிய நூல்கள் யாவும் ஒருங்கே இழந்து பிறர் மயக்கி லாழ்ந்த தமிழர்கள் என் செய்வார். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!

மேற்கூறியாங்கு பாண்டியர் நிலைகுலைந்தபின்னர் சிற்றரசர்க ளில் ஒருசாரார் ஆங்காங்கு தமிழ்மொழியினை ஒரு சிறிது வளர்த்து பற்பல பாவலர்களைப் பாதுகாத்துவந்தனர். அவ்வாறுவரினும் அறி வு நூல்களுள் ஒன்றேனும் வெளிப்பட்டபாடில்லை. பின்னர் சுமார் எழுநூறு எண்ணூறு வருடங்களுக்கு முன் சிவாகம வழித்தாய் சந் தானகுரவர் பரம்பரையில் வந்துதித்த மஹா ஞானிகளால் நமது செந்தமிழ் மொழியில் பற்பல ஞான நூல்கள் வெளியிடப்பட்டன. சமய குரவர்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன் அருளிச் செய் யப்பெற்ற தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசக முதலிய நூல் களும் மேற்கூறிய ஞானநூல்களுமே தமிழணங்கிற்கு அணிகலன்க ளாயின. இந்நூல்களும் திருவாய்மொழி முதலிய நூல்களும் இம் மொழியிலில்லையேல் தமிழர்கள் தமிழர்களே யல்லராவர். இந்நூல் கள் சுருங்கிய அளவினுட்பட்டு நிகழ்வனவேயன்றி வேறல்ல. பிற

தேயங்களில் ஒவ்வொரு வருடத்தினும் வெளிவரும் அறிவு நூல்களுக்கு ஓரளவுளதோ. அவ்வாறு நமது தமிழ் நிலத்துள் இதன் முன்னரில்லா அறிவு நூல்கள் பல வெளிப்பட்டாலன்றோ செந்தமிழ்ப் பைங்கூழ் செழித்தோங்கி வளர்ந்து பயன் பயப்பிக்கும்?

தமிழணங்கிற்கு இவ்வித குறைபாடு உள்ளதென்பதை யாவர்தாம் உணராதார்? உணர்ந்தும் பயனென்ன? இம்மொழியைப்பயில்வதால் வரும் ஊதியம் யாது? என்று கூறி ஒருங்கே கைவிடுவாராயினர். அம்மட்டோடு நில்லாது தமிழின் முன்னிலை பேசித்திரியவுஞ் செய்வர்.

இத்தகைய நிலையிலுள்ள தமிழ்மொழியை அபிவிர்த்திசெய்ய எத்தனையோ உபாயங்களும் வழிகளுமிருக்க அவைகளைக் கைக்கொண்டு நடத்துதல் செல்லாமல் நம்மவர் வெகுகாலம் வாளாவிருப்பாராயினர். அம்மட்டோ! பிறமொழி பிறங்கி நிலைபெற ஊக்கி நிற்பாராயினர். அதுவுமன்றி தற்காலத்தில் ஆங்கிலகலாசாலைகளில் தமிழ் கட்டாயமாய்ப் படித்துத்தான் தீரவேண்டும் என்னும் நியதியும் ஏடுபட்டுப்போயினது எவர்க்குந் தெரிந்தவிஷயமே. நமது மடாதிபதிகளும் சிற்றரசர்களும் கவிஞர்களும் பாதிரிமார்களுமில்லையேல் தமிழ் என்ற வார்த்தையே இத்தமிழகத்தில் கேட்டலரிதாய்விடும்.

இவ்விதமாகிய நிலையிலுள்ள தமிழ்மொழியை விர்த்திசெய்ய வேண்டுவதற்காக மதுரைமாநகரில் ஓர் தமிழ்ச்சங்கமும், நமதுசைவ சித்தாந்த சமையத்தை விளக்க வேண்டுதற்காக சித்தாந்த மஹா சமாஜமும் சில்லாண்டுகளுக்கு முன் அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டு நன்கு நடந்தேறி வருகின்றன. அம்மட்டோ! இவ்விரு சங்கங்களின் கிளைகளென்று கருதத்தக்கதாய் எத்தனையோ சபைகள் ஆங்காங்கு ஏற்பட்டு நடைபெற்று வருதலையுங் காண்கின்றும். அதனோடு செந்தமிழ்க் கல்விச்சாலைகளும் தேவார பாடசாலைகளும் சிற்சிலவிடங்களில் நிலவுகின்றன. அம்மட்டோ! தமிழ்மொழியின்கண்ணுள்ள அருமையான நூல்கள் யாவற்றையும் ஒருங்கே சேகரித்து வைக்கப்பெற்ற பல புத்தகசாலைகள் நமது செந்தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் விளங்கப் பெறுவதை யாம் காண்கின்றும். இங்கிலாந்து, ஜர்மனி முதலிய தேசங்களினும் நமது இனிய தமிழ் மொழி

நன்கு சென்று உலாவுகின்றது. அதனைக்கேட்ட நம்மவர்கள் மிகு சிரத்தையோடு செந்தமிழ்ப் பயிர்வளர்க்கத் தலைப்படுவாராயினர்.

ஆகையால் அன்பர்களே! தற்காலத்தில் இத்தகைய சங்கங்களாலேயே நமது பாஷையும் மதமும் நம்முடைய நாட்டில் நிலவுகின்றனஎன்பதற்கோர் ஐயமுமில்லை.

அத்தகைய நோக்கத்தோடு கூடிய சபைக்குள் நாமெல்லாம் கூடுவதற்குக் காரணமாய் நின்ற நமது சன்மார்க்க சபையுமொன்றேயாம். அன்பர்களே!

சன்மார்க்க மெனினும் நன்னெறி எனினும் ஒக்கும். உலகத்தில் யாவரும் ஒழுகுற நடத்தற்கமைந்த நல்வழியையும், அந்நல்வழியே ஒழுகிய பின் சரியை கிரியை யோகம், என்னும் மும்மார்க்கத்தின் பயனாய் வந்தெய்தும் ஞானத்தையும் நன்கு போதிக்க வல்ல சபையாதலினால் இதற்கு சன்மார்க்க சபை என்று அறிஞர் பெயரிட்டனர் போலும்.

ஈண்டு நீதிவழிப்போந்த சன்மார்க்க மென்பது நடுநிலைகோடாதிருத்தலேயாம். நடுநிலையாதோவெனில், பகை, நொதுமல, நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலையாம். அதாவது முன்னர் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந்துலாப்போல, இலக்கணங்களால் அமைந்து ஒரு பக்கத்துக்கோடாமையாம். இவ்வாறு கோடாதிருத்தல் சான்றோர்க்கழகாம். துலாக்கோலில் இருபக்கத்துள் எப்பக்கம் கோணினும் உலகம் ஒப்பாதாம்.

சன்மார்க்கமென்பது மனிதருக்கே யுரித்தாம். அது அகம் புறம் என இருவகைப்படும். முன்னையது அந்தரங்கமாய் யாவருக்குந் தெரியமுடியாததாய் அறிவின்கண் நிகழ்வது. பின்னையது வெளிப்பட்டுச் செயலின் மாட்டு நிகழ்வது. புறமெல்லாம் அகத்தைப் பின்பற்றியே நடைபெறும், ஆதலால் அந்தரங்கமான சன்மார்க்கமே மிக முக்கியமானதாம்.

ஓர் அரசனுடைய சட்டமானது புறநீதியைப்பற்றினதாயிருக்கும். இறைவனுடைய சட்டமோ அகம் புறம் இரண்டினையும் பற்றி நிகழ்வதாயிருக்கும். இது நிற்க,

இத்தமிழ்மொழியில் சன்மார்க்கத்தினை உலகெங்கும் பரவச் செய்யும் பேராவலுடன் மஹான்கள் பலரால் பதினெண்கீழ்க்கணக் கினையுள்ளிட்ட சுமார் நாற்பது நீதிநூல்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் தலையாயது திருவள்ளுவதேவர் குறளேயாம். இந்நூல்களெல்லாம் அறத் தினைச் செய்ய ஏவுவதோடு மறத்தினை விடுக்கவுங்கூறும். விதித்தன செய்தல் அறமாம். விலக்கியன செய்யாதொழிதலும் அஃதேயாம். ஆகவே விலக்கியன செய்தல் மறமாம்.

இன்னதைச்செய்கவென்று வரையறுத்துக் கூறுதலால் அற மென்றழைக்கப் பெற்றது. இன்னதைச்செய்யா தொழிகவென மறுத்துக்கூறுதற்குரிய தாதலால் மறமென்று அழைக்கப்பெற்றது.

ஆதலால் மறத்தினைச் செய்யாதொழிதலே சான்றோர்கடனும். எனவே அறத்தாற்றில் நிற்றலே அறிஞர் கடைமையாம். அறத் தாற்றினில்லாது மறத்தாற்றில் நிற்கும் மக்கள் செயல்களுள் ஐம் பெரும் பாதகமே மிக இழிவுதரத்தக்கவாம். அப்பாதகங்களாவன கொலை, களவு, கள், காமம், பொய் என்பனவாம். இப்பாதகங்களி னின்று ஒருவன் நீங்கப்பெற்றானாயின் அவன் செய்யக்கடவவாகிய தவங்கள் வேறுயாவை? இப்பாதகங்களுக்குள் களவு, கள், காமம் என்னும் மூன்றினும் கொலை, பொய் என்னும் இரண்டுமே மிக்க கொடுமையானவாம். இவ்விரண்டினுள் மிகமிகக் கொடியது யாது என ஆராயப்புகுங்கால் பிறவுயிர்களை வருத்துதல் என்னும் பொரு டரும் கொலையாம். ஏனெனில்,

> பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்.

என்று கூறியிருத்தலால் நன்மைபயக்கும் வழி பொய்மையும் ஒரு சார் எடுத்துக் கொள்ளப்படும். கொலையோ எவ்விதத்தாலும் எடுத்துக் கொள்ளப்படுமாறில்லை.

ஆதலால் கொல்லாமை என்னும் பேரறம் நம்மாட்டுக்கைவரப் பெறின் வேறோர் அறம் செய்தல்வேண்டாவாம். கொல்லாமை கூடாதெனவே புலால் உண்ணலும் கூடாதென்பதாயிற்று. ஏனெ னில், "ஊனைத்தின்றூனைப்பெருக்காமை முன்னினிதே" என்றார் ஆன்றோரும்.

இறைவனால் சிருஷ்டிக்கப்பெற்ற பிராணிகளைக் கொன்று அவைகளின் தசையைத்தின்று களிப்புறுவதிலும் வருத்துதலை ஒரு சிறிதும் அறிதற்குரிய வாற்றலில்லாத தாவரங்களினின்றும் உணவுகளைப் புசித்தல் மிகமேலான தொன்றன்றோ?

தாவர வுணவுகளைப்புசித்தால் சாத்துவிகநிலைமை மேற்பட்டு நிகழுமாறு காண்கின்றோம். ஆதலால் அவ்வுணவுகளையே உண்ண முயலவேண்டும். பிறநாட்டினரும் அவ்வுணவுகளின்மேம்பாட்டினை யறிந்து அவைகளையே உண்ணத்தலைப்படுவாராயினர். அம்மட்டோ! அவ்வுணவுகளை உண்ணும்படியேவும் பல சபைகளை ஆங்காங்கு நிறுவிப் பல நூல்களும் வெளியிடுவாராயினர். ஆதலால் பிறவுயிர்களைக் கொல்லுதலென்னும் தீயவொழுக்கத்தினை அறவே கைவிட்டு புன்புலால் புசியாது நின்று சுத்த தாவரவுணவுகளை அருந்தல்வேண்டும்.

புலாலுண்ணுமை என்னும் ஒழுக்கத்தினைக் கைக்கொள்ளாது சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களை யணிதலால் வரும் பயனென்? ஒன்றுமின்றாம். ஏனெனில் எவ்வுயிர்க்கும் அன்பிலார் ஈசனடிக்கன்பிலாராவர். இதுபற்றி ஜீவகாருண்ணியம் மிகவேண்டப்படுதலை யறிக. எல்லா அறங்களுக்கும் மேலான கொல்லாமை என்னும் அறத்தினையுடையாரே சிவ தீக்ஷை சிவ பூஜை முதலிய சற்கருமங்களுக்குரியவராவர் அன்றி மற்றையராகார் என்பதாம்.

சன்மார்க்கத்திற்குத் தலையாய கொல்லாமை என்னும் நீதியை ஒருவாறு சுருக்கிப்பேசினுய. இனி சமைய சன்மார்க்கத்திற்கு அங்கமாகிய தீக்ஷை என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு சிறிதுபேசுவாம்.

பாசநீக்கஞ்செய்து சிவஞானத்தையளிப்பது தீக்ஷையாம். இச்சிவஞானமே மோக்ஷத்தையளிக்கவல்லது. இச்சிவஞானத்தாலன்றி மற்றொன்றாலும் திருவடி சேர்தலாகிய அத்துவித முத்தியடைதல் கூடாததாகும். ஆதலால் தீக்ஷைப்பேறே முதன்முதல் யாமடையும் கருமமாகும். அதனாலேயே பாசமோசனமாம. அத்தீக்ஷையும் பல விதமாய. அவையாவன. (1) நோக்கம. (2) பரிசம். (3) வாக்கு. (4) பாவனை. (5) நூல். (6) யோகம. (7) ஒளத்திரி முதலியனவாம்.

(1) ஆசாரியன் மேலான உண்மையைத்தியானஞ் செய்து ஞானக்கண்ணினாலே சீடன் பாசத்தைச் சேதிக்கிறது நோக்கமாம்.

(2) சிவ ஹஸ்தத்தால் சர்வாங்கமும் பரிசித்தலால் பாசமோசனஞ் செய்வது பரிசமாம். சிவ ஹஸ்தமாக்குதலைக் கேட்டுணர்க.

(3) ஞான வொளியுடனே ஸம்ஹிதாமந்திரங்களை உச்சரித்துச் செய்வது வாசகமாம்.

(4) மந்திரக் கிரியா பாவனையில் வழுவாமல் கிரியா தீக்கைக்குரிய கன்மங்களை மனத்திற் பாவிக்கை மானதமாம்.

(5) காமிகாதி. 28 சிவாகமங்களில் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களும் தோன்றிய முறையும் அவைகளை ரட்சிக்குமுறையும் படிக்குமுறையும் போதிப்பது சாத்திர தீக்கை. இச்சிவாகமங்களின் வழித்தாகிய மெய்கண்ட சாத்திரங்களைப் போதிப்பதும் அஃதேயாம்.

(6) ஆசாரியன் நாடி சந்தான மார்க்கத்தால் சீடனுடைய ஹிருதயகமலத்திற் பிரவேசித்து சுழுமுனை நாடியிலுள்ள ஆன்ம தேஜஸை பிரமரந்திரபரியந்தம் கொண்டுபோய் சிவத்தோடு யோசிக்கை யோகமாம்.

(7) குண்டமண்டலத்தோடு செய்வது ஔத்திரிதீக்கை. இது ஞானவதி, கிரியாவதி என்று இருவகைப்படும்.

குண்டமண்டலம், அங்கி, நெய், சுருக்கு, ஸ்வருவம்முதலியன வனைத்தும் மனத்தாற்கற்பித்துக்கொண்டுகிரியைசெய்வதுஞானவதி.

புறம்பே அவ்வாறு கிரியையொடு செய்வது கிரியாவதி. ஓம சம்பந்தத்தால் ஔத்திரி எனப் பெயர் பெற்ற அத்தீக்கையும் நிர்பீஜம், சபீஜம் என்று இருவகைப்படும். பீஜம் சமயாசாரத்தோடு கூடியது. நிர்பீஜம் சமயாசாரத்தோடு கூடாதது.

நிர்பீஜ தீக்கையாவது சமயாசாரம் வழுவும் ஆற்றலுடையவர்களாகவும் மலபரிபாக மில்லாதவர்களாகவுமுள்ள அறிவில்லாராகிய பாலர், அறிவீனர், முதியோர், மாதர், பலபோகத்தினர், நோயினர் முதலாயினோர்க்கு சமயாசாரத்தை விளக்கி ஆகுதியால் சுத்தி செய்து ஒழித்து நித்திய கன்மம் இயன்றவாறு அநுட்டிக்க அதிகாரமுள்ளவராக்கி வைப்பது.

இதுவே நிரதிகார தீக்கை எனவும் படும். நிரதிகாரமென்பது நித்தியத்தும் காமியத்து மதிகாரங் கொடாமை.

இந்த நிரதிகார தீக்கை, மூன்று வகைப்படும். அவையாவன. (1) சமையம் (2) விசேடம் (3) நிருவாணம் என்பனவாம. இவற்றுள் ஒன்றைவிட ஒன்று உயர்ந்ததாம். சமையம் சைவசமயத்துட் பிரவேசிக்கச் செய்யும். விசேடம் சிவபூஜைக்கருகராக்கும். நிருவாணம் முத்தி கொடுக்கும்.

(தொடரும்.)

எஸ். பால்வண்ணமுதலியார்.

# "கற்பு"

---

அறிவினான்ற அக்கிராசனாதிபதியவர்கட்கு மேனைய வித்வஜ்ஜன கனவான்கட்கு மெளியேனது மனப்பூர்வமான வந்தனம்.

அன்பர்காள்!

நகரவணிக மணிகளின் சன்மார்க்க அபிவிருத்தி கருதி ஸ்தாபிதமாகி மேன்மேலும் பெருகி வராநின்ற விச்சபையின் நான்காவது வருட பூர்த்திக் கொண்டாட்ட காலத்திலென்னையு மோர் விடயத்தை யெடுத்தாளும்படியாக அன்புடன் வேண்டிய நண்பர் கனம் கதிரேசச்செட்டியா ரவர்களின் வேண்டுகோளை மறுத்தற்கஞ்சியயான் இத்தகைய பேரவையின் கணிறைந்துள்ள அறிஞர்க ளெளியேனா லியன்றவரை கூறப்படும் வியாசத்தின் குற்றங்கடிந்து குணங்கொண்டு மகிழ்வார்களென்னுந் துணிவாற் கற்பென்னும் விடயத்தைப் பற்றி விவகரிப்பான் புகுந்தனன்.

இந்நிலவுலகிற் பெறுதற்கரிய மானுடப்பிறப் பெய்தியோ ரடையவேண்டிய முத்தியைப் பெறுதற் காதாரமாகிய அறத்திற்குவித்தும், துறவறத்திற்கு வேருமாய் விளங்குவது இல்லறமேயாம். இத்தகைய இல்லறத்திற் குயிர்த்துணையாயிருப்பவள் மனைமாட்சியாய நற்குண நற்செய்கையுடையளுங் கணவன் வருவாய்க் கியைந்த வாழ்க்கையுடையளுமாய பெண்மணியன்றே. அங்ஙனஞ் சிறப்பெய்த நிற்கும் பெண் விவாகமாவதற்கு முன் பெற்றோராற் கற்பிக்கப்படும் நீதிமொழிகளையுங் கிருகாச்சிரம நிர்வாகத்திறனையு முற்றுமுறவினராய சுற்றத்தார்ப்போற்று முறையையும் நன்குணர்ந்து விவாகநிறைவேறிய பின்னர் அவற்றைப் பரீக்ஷிக்குங் களமாகிய மனைவாழ்க்கையினதிபனான, தன் பெற்றோரா லுதவப்பட்ட கணவனின் பொன்மொழி கொண்டவனை யன்புடன் விசுவசித்துப் போற்றிவருதலே கற்பெனப்படும். இந்தப்பெண்ணிலக்கணத்தையே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" எனக் கூறியுள்ளார்.

ஆதலி னறந்தனிற்சிறந்த இல்லறம் புரிய, அன்பு அறிவொழுக்க முதிர்ந்த பெண்மணியை நம்மதக்கோட்பா டொப்பக் கடிமண

மயர்வோன், தன்னுனிர்வகிக்கப்படவேண்டிய குடும்பத்தை யொழுங்குறநடத்தவாற்ற னிரம்பியவனுகவும் கல்வியறிவொழுக்கந்தெய்வங்கொள்கை முதலாய ஆடவர் குணங்க ணிறையப் பெற்றவனுகவும் விவாகஞ்செய்து கொள்ளற்கொத்த பருவமாகிய 23, 25 வயதுள்ளவனுகவும் பொருளீட்டல காத்தல் முதலிய வியகாரங்களை நன்குணர்ந்தவனுகவு மிருத்தல் வேண்டுமல்லாது பேக்கனென்ற வாங்கிலப்புலவர் "A young man not yet and an elder man not at all" எனப் புகன்றவாறு உண்மைக் காதலின் றன்மையை யுணரு மாற்றலில்லாத வதிக விளமைப் பருவமுள்ளவனும், அத்தகைய காதலை யனுபவிக்கும் வயது கடந்தவயோதிகனு மோர்பெண்ணை மணந்துகொள்வரே லப்பெண் பெரும்பாலுங் கற்பழிபழியே பெற நிற்பாளென்க. ஓர்புருடன் வரிக்க நிற்கும் பெண்ணனவள்,

"கொண்டான் குறிப்பொழுகல், கூறிய, நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி,
யுறுப்போ டுணர்வுடையாள் பெண்.

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப் பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறல் மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்," என்ற நீதிக் கிணங்கத் தன்னை மணந்தகாதலன் விருப்புவெறுப்பிற் கேற்பக் காலமறிந்து இணங்கி நடப்பவளாகவும், பெண்ணிலக்கண நான்கிற்றலையாய நாணமுடையவளாகவுந் தான் காண்பனவற்றையெல்லாம் பெறுமாசைகொள்ளாதவளாய்த் தான் புகுந்த வில்லி லில்லாதவற்றிற் கிச்சைவையாது உள்ளவற்றோடு மகிழ்ந்து புருஷனிடத்திற்றாயைப்போன்ற அன்புடையவளாகவுமவற்கியற்றும் பணிவிடைகளிற்றாதிபோலவும் அவர் விருப்பத்தக்க லெட்சுமிபோன்ற வியற்கைவனப்புடையளாக அதாவது முகவழகு குன்றுதிருத்தற்கான கோபமுதலிய கொடுங்குணங்களில்லாமல் முகமலர்ச்சியுடையவளாகவும், கணவன் யாதாவது காரணத்தினற் றண்டிக்க நேரினுமவற்றைப் பூமாதேவிபோன்று பொறுமையுடனேற்றுச் சந்தோஷமாய்க் குடும்பத்தைநிர்வகிக்குநம்

திறனுடையவளாகவும், அவர்சரியான நித்திரைபெற் றின்புறுமாறு கைகால் வருடல் முதலியன செய்து களிப்படையச் செய்வதிற்றாசி யைப்போலவும், தங்கணவன் காமமுதலிய முக்குற்றவயத்தான் முறை பிறழ்ந்து செல்லுங்கா லெல்லாமவரை நன்னெறியி னிற்கச் செய்வதற்கான போதனைகளைக் காலமறிந்து புகட்டுமாறு புகட்டி யறத்தின் வழி நிற்கச்செய்வதி லறிவு நிரம்பிய மந்திரிபோலவு மிருத்தல் வேண்டும்.

ஸ்திரீபுருடர் மனைவாழ்க்கையாகிய சகடத்தைத் தர்மச்சரக் கேற்றிக் கருமஹேதுவாக மனமொத் தீர்த்துச் செல்லுங் கடப்பாடு டையவராதலின் ஒருவரையொருவ ரன்புடன் விரும்பியிருக்குமுள் ளக் குறிப்புணர்ந்தே விவாக முடித்துவைத்தல் பெற்றோர் கடனாம். இங்ஙனங் குறிப்புணர்ந்து செய்யுந்திறன் அறிவினு மனுபவத்தினு மான்ற பெற்றோர்கட் கியற்கையிலுளதென்னுங் குறிப்பினை விளக் கவே நம்முன்னோர்கள்

"குரவர்தாமியைந்து கொடுத்திலராயிற் குமரவேளனையவரேனு மருவராநிற்பர் தந்தைதாய் தங்களாணையி னொழுகு கன்னியர் தாம் உருவிலாரெனினுங் குரவருண்மகிழ்வுற்று தவுறினனையவர் தம்மைப் பரவுவான் கடவுளாகவே நினைந்து பண்பொடும் பயிலுவரன்றே.

எனக் கூறியதிற் கிணங்க வறிவிற் சிறந்த வரிவையருங் கொண்ட கணவன் குருபியேயாயினும் பண்டுதான்செய்த பவினைவேகொ ண்டு தனக்கவ்வளவு சுவாதீனமின்மையின் தனதுயிர்ச்சிநேகனாகிய காதலனாணையை மறுதவாக் கினிமையானவற்றையே செய்து அவ ருடனின்புறுவதே தனக்கணியென மெல்லியனல்லா ளௌவைப்பிரா ட்டியாரருளிய "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை, காவலனே பாவையர்க்கழகு" என்ற நீதிப் பொருள்வழியொழுகவே சிறப்பாக க்கூறப்பட்டுளது.

நிற்க. விவாகவிதிமுறை நிர்ப்பந்தமற்ற மேனாட்டார் முதலிய சின்னாட்டாருள் ஸ்திரீயானவள் பேதைமையாலு மிலேச்ச சிற்றி ன்பவாசையாலு மந்தரங்கமான காதலின்றி யந்தஸ்து செல்வமழகு தாழ்வானபோக மிவைகளாற் றூண்டப்பட்டு எண் மணத்துளொன்

ருன கந்தருவநெறியான் மணந்துகொண்ட மணமகனின் குடும்பத்திற் சேர்ந்து வாழுஞ் சின்னாளிலேயே யவனைப்பிரிந்து தான் காதல்கொண்ட மற்றோர் புருடனையுங் கொண்டனுபவிக்குஞ் சுவதந்திரமுடையவரா யிருப்பதால், ஸ்திரீ புருடர்களுக்கு ளேற்படவேண்டிய வியற்கைக் காதலின் முதிர்ச்சி யிருப்பதற் கேதுவில்லாமலிருப்பதோடு கற்பெனுந் திட்பத்தையு மவரிடங் காணக்கூடவில்லை.

ஆயினவர்களிடத் ததுகற்பென்று வர்ணிக்கப்படுகிறதெனின் ஓர் ஸ்திரீயானவள் தான்கொண்ட கணவன் ஞானமுள்ளவனாகவிருப்பதை யறிந்தால் அவனிடத்து விசுவாசமுடையவளாகவுங் கீழ்ப்படிதலுடையவளாகவு மிருப்பள். அவள் அவன் தன்னிடத்தன்பு கூராது பொறாமை யுடையவனெனக் காணிலுடனே அவனுக்குக் கீழ்ப்படிதலின்றி வெறுத்துறைவளென உலிசெஸ் என்ற மேனாட்டுப் புலவர் புகன்றவாறு ஓர் ஸ்திரீ தனக்கு விருப்பமுள்ள புருஷரையெல்லா மணந்தவரிடமெல்லா முள்ளன்போடு கீழ்ப்படிந்து நடத்தருன் கற்பெனப்பட்டுக் கௌரவிக்கப்படுகிறதென விளங்குகிறது. நாமோ ஓரே புருடனைக் கொண்டு அவனையே தெய்வமென வெண்ணி யவன்சொல்லை வேதமாகப் பாவித்து அவனிடமன்புடனுறைந் தில்லறதர்மத்தை வசையறப் புரியுமாதினொழுக்கத்தையே கற்பென்று கூறும் பெருமையையுடையேம்.

அத்தகைய சிறந்த கற்பணிபூண்டு உலகிற்குப்பல வருந்ததி போன்று விளங்கவேண்டிய பெண்மணிகளியாவரு மடியிற்கூறப்படும் நீதிகளைக் கைப்பிடித்தொழுக முயல்வரேல் நந்நாட்டின் பூர்வீக வளமு மறிவாசாரங்களு மென்மேலும் பல்கிப் பெருகுமெனக.

சிறுகாலையட்டில் புகலருத்தியுறச் சமைத்தல் சுவைதிருத்தியூட்டல், மறுகாலையெண்ணாது விருந்தழைத்தல் மகப்பெறுதல் மடநாணச்சம், பெறுகாலை யின்புறுதல் முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல், உறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கர்க் கற்புடையோர் செய்கை.

(இன்னும் வரும்)

பி. சிதம்பர புன்னைவனநாதன்.

# செய்ந்நன்றி யறிதல்.

அஃதாவது, தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை எனப் பொருள்படும்.

அந்நன்றி, காரணமின்றிச் செய்ததூஉம் காலத்தினாற் செய்ததூஉம், பயன்றூக்காது செய்ததூஉம் என்பன ஆதியாகப் பல திறப்படும்.

காரணமின்றிச் செய்த வுதவியாவது, தனக்கு முன் ஒருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த வுதவி.

காலத்தினாற் செய்த வுதவியாவது, ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக்கண் ஒருவன் செய்தவுதவி.

பயன்றூக்காது செய்த வுதவியாவது, இவருக்கு இது செய்தால், இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்த வுதவி.

இம்மூவகை உதவியின் பயனையும் இத்துணைத்தெனவரை யறுத்தல் ஆய்ந்த அறிவினர்க்கும் இயல்வதன்றாம்.

இம்மூன்று மல்லாத வுதவி மாத்திரமும் அறிவாளர்க்குச் செய்த வழி.

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்." என்றவாறு அவ்வுதவியைப் பெற்றுக்கொண்டவரது சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாம்.

உலகத்து பொருள் அதிகாரம் என்பன ஒருவர் மாட்டே நிலைபெறுதலன்றி மாறிமாறி வருதலியற்கையாம். ஆதலின், எவ்வாற்றானும் பிறருதவி சிறிதுமின்றி உயிர் வாழ்தல் நம்போலியர்க்கு முடியாததாகும். ஆதல் பற்றிப் பிறர் செய்த நன்றியைப் பெறுதற்குரியநாம் ஆனினது முலையாற் பெறும் பயனைக் கெடுத்த தீவினையாளர்க்கும்(கோவதை செய்தவர்க்கும்)மாட்சிமைப்பட்ட ஆபரணத்

தையுடைய பெண்டிரது கருப்பத்தை அழித்தோர்க்கும், (ஸ்திரீ வதை செய்தவர்க்கும்) பார்ப்பாரைப் பிழைத்த கொடுந் தொழிலையுடையோர்க்கும், (பிராமணவதை செய்தவர்க்கும்) அவர் செய்த பாதகத்தினை ஆராயுமிடத்து அவற்றைப்போக்கும் வழியுமுள வெனவும், நிலம் கீழ் மேலாங்காலமாயினும் ஒருவன் செய்த நன்றியைச்சிதைத்தோர்க்கு நரகம் நீங்குதலில்லை எனவும், அறநூல் கூறுவதை அறிந்து பிறர் செய்த நன்றியை மறவாமை வேண்டும்.

ஒருநன்றி செய்தவர் பின்னரனேகந் தீங்குகளைச் செய்யினும் அந்நன்றி ஒன்றைமட்டும் மறவாதவராய் அவர் செய்த தீமைகளெல்லாவற்றினையும் பொறுப்பர் அறிவுடையோர். அநேக நன்மைகளைச் செய்தவர் ஒரு தீமையை இயற்றினும் அந்நன்மைகளெல்லாவற்றினையும் மறந்து தீமை யொன்றனைமட்டும் மனத்துளமைத்துக்கனல்வர் கயவர். இதனை,

"ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழு நூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழு நூறுந் தீதாய் விடும்." என்பதினுற்றெளிக.

இது நிற்க. அரும்பெரும் புதல்வராய உபபாண்டவரைவரையுந் துயிலுஞ் சமயம் பார்த்து, ஏககாலத்திற் றன்னுடை வாளால் உயிர்மாய்த்துச் சென்ற அச்சுவத்தாமாவைக் கொல்லும் பொருட்டு அர்ச்சுனன் பற்றிக்கொணர்ந்து பாஞ்சாலி முன்னர் விடுப்பப் புத்திர சோகத்தால் வருந்தி நிற்கும், அப்பாஞ்சாலி அருச்சுனனை நோக்கி "ஒருவ னந்தணனுனக்கு விற்றொழில் புவியியப்புற உணர்த்திட்ட குரவன் காதலன் கொல்லல் நீ விடுக" எனவும். "இறப்பு வந்ததே யின்னெழிற் புதல்வனுக் கென்றிவன் றனையீன்ற, நறைக்கருங் குழனங்கையும் பொருமுதனன்று கொல்" எனவுங் கூறித்தன் மைந்தரைக் கொன்று நின்ற அச்சுவத்தாமாவுக்கும் நன்மை செய்திருப்பதாய் அறிகிறோம்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யினன்றோ அவர் சால்பு பயனுடைத்தாம். இங்ஙனமிருக்க இனியவே செய்வார்க்கு மின்னாவே செய்வாரியல்பை என்னென் றெடுத்துக் கூறுவேம்?

தாயினு மினியன் எனவும், அன்னை போல அருண் மிகுத்து, எனவும், அன்னை யொப்பாய் எனவும், என் செயினுந் தாயிற் சிறந்த தமரில்லை எனவும், தாயோ டறுசுவை போமெனவும், தாயிற்சிறந்தொரு கோயிலு மில்லையெனவும் இங்ஙனமாக அறிஞர் பலரும் உவமை முகத்தானும் பிறவாற்றானும் பொதுப்படத் தாய்மாரைப் புகழ்ந்திருக்கத் தாயாரருமை யறியாது சிலர் அவர் வெறுப்பனவே செய்து காலங்கழிக்கின்றார்கள். தாய்மார் தந்தங் குழந்தைகள் பொருட்டுச் செய்திருக்கும் நன்றிக்கு ஈடாகத் தக்கது ஒன்றுமே யில்லை. இதனை,

"ஈன்று வளர்த்த தாய் தந்தைக் கெவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருண் முழுது மளித்து முறைமுறையே
ஏன்று வழிபா டியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கொவ்வாதே."

எனவருஞ் செய்யுளானுணர்க.

"தந்தை மகற்காற்று நன்றியவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்றவண்ணந் தம்புதல்வரை நல்லாசிரியர்பாற் கல்வி பயிற்றுவித்து எல்லாரினும் முந்தி யிருக்கும் நன்கு மதிப்பைத் தந்த தந்தையரை இவரியாரெனப் பிறர் கேட்புழித் தங் கௌரவத்திற்குக் குறை நேருமோ வென்றையுற்று அச்சமபத்துந் தந் தந்தையாரை எதிலர் போல் உரையாடுகின்றனர். இங்ஙனங் கூறுவதால் வருவது அவமானமே யன்றிப் பிறிதில்லை யென்பதனைச் சிந்தித் துணராமை அந்தோ! பரிதாபம்.

ஓரரசன் அபிமானத்தோடு கூடிச் செல்வமுஞ் சிறப்பு மளித்துத் தன்னைக் காத்து வருநாள்களுள் ஒருநாள் அயல் தேசத்தானொருவன் படையெடுத்து வரச் செருமுனையுட் சென்றுயிர் விடுதற் கஞ்சி வீரனுயுள்ளவன் அவ்வரசனினின்றும் நீங்கிற் செய்ந்நன்றி கொன்ற பாதகனெனப் பல்லாரானும் பழிக்கப்படுவன்.

தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து ஆண்ட வரசர் கண்கள் நீர் மல்கும் வகை போரிடச் சென்று சாவப்பெறின், அச்சாக்காடு இரந்தாயினுங் கொள்ளுந் தகைத்தாம்.

கிளையழ இல்லிடை நோயால் விளிவார் பழ வினைப்பயனே எய்தலின், தம்மையாண்ட அரசர் பொருட்டுப் போரிடைச் சென்று

மடி தலாற்றுறக்கமெய்துஞ் சாதல், நோயால் விளிவார் விளிவினுஞ் சிறந்ததாய் யாவராலும் விரும்பிக் கொள்ளத் தக்க தொன்றும். இஃதுணர்ந்தன்றோ துரோணசாரியர் முதலான அறிஞர்கள், முறையில் செய்கைகட்கு ஆகரமாயுள்ளவன் துரியோதனன் என்பதனை யுணர்ந்தும் அவனன்னத்தையே உண்டு வாழ்ந்தமையால், சோற்றுக்கடன் கழித்தற் பொருட்டுப் பாரத யுத்தத்திற் றுரியோதனன் பக்கலிலேயே நின்றுயிர் துறந்தார்கள்.

"உப்பிட்டவரை உள்ளளவு நினை" என்ற அறமொழியை எவர்கள் கைக்கொண்டார்களோ அவர்கள் இருமைப் பயனு மெய்தி வாழ்தல் நிச்சயம்.

விபீஷணன் கும்பகர்ணனிடஞ் சென்று, வேண்டிய வேண்டியாங்களிக்குந் தடங்கருணைப் பெருங் கடலாகிய ஸ்ரீராம பிரானை நீயும் அடுப்பின், இம்மையிற் செல்வமும் மறுமையிற் றுறக்கமும் எய்தி வாழ்தி, எனக்கூற, அதற்குக் கும்பகர்ணன் விபீடணனைப் பார்த்து அன்புறந் திகழும் மன்பெருந் தம்பி!

"நீர்க்கோல வாழ்வை நச்சிநெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டார்க் குயிர்கொடா தங்குப் போகேன்
றார்க்கோல மேனி மைந்த வென்றுயர் தவிர்த்தி யாகிற்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதி னென்றான்" என்றும்,

குந்திதேவி கர்னன்பாற் சென்று நின்னைப்பெற்றவள் யானே என்பதனையும், நின் உடன் பிறந்தவர் பாண்டவரே யென்பதனையும் ஐயமறத் தெரிந்து உணருமாறு தெரிவித்து அதன் பின்னர்க் கர்னனை நோக்கிக் குழந்தாய் நீ துரியோதனனை நீங்கி நின்னருமைத் தம்பியராகிய ஐவருடன் கூடக் கடவாய். கூடிற் பாண்டவர் துரியோதனாதியரை வெல்வர். வென்று நினக்கே மகுடஞ் சூட்டுவர். உன்றம்பியருடன் உலக முழுதும் நீயே கொண்டு ஏகசக்ராதிபதியாய் வாழலாம் என்று கூறினள்.

(இன்னும் வரும்.)

ரெ. ராமமூர்த்தி ஐயர்.

# பாஷையின் தோற்றம்.

கல்விப்பயிற்சியில் சிறந்த பெரியோர்கள் செய்யத்தக்க பிரசங்கமென்னும் பெரும் சுமையைத் தாங்கும்படி மகா-ள-ள ஸ்ரீ கதிரேசச்செட்டியார் அவர்களால் ஆஞ்ஞாபிக்கப்பட்ட நான் இவ்வித பெரும் பழக்கமில்லாதவனாயினும், நுட்பமான அறிவு வல்லமையடையாதவனாயினும், நம் தேசத்தில் ஆங்காங்கு பிரவகிக்கும் சாதாரணமான நதி தீர்த்தமும், பெரியோர்கள் செய்யும் மந்திர சம்ஸ்காரப்பலத்தால் கங்கை, காவேரி முதலிய நதிதீர்த்தங்களின் மிக உத்தமமாய் ஸகலபாவங்களையும் போக்கடிக்கத்தக்க பெருமைபெறவில்லையா? அதுபோல இச்சன்மார்க்க சபையில் நிறைந்திருக்கும் வித்வான்களின் அனுக்கிரகபலத்தால் உபன்யசிக்கலாம் என முயன்றேனேயல்லாது வேறில்லை. நான் எடுத்துரைக்கவேண்டிய பாஷையின் தோற்றம் என்னும் விஷயத்தைப்பற்றி தெரிந்தவரை உபந்யஸிக்க இடங்கொடுத்து குணமுளரேல் அதைக்கொண்டு சிரவணானந்தமடையக் கேட்டுக்கொள்ளுகிறேன். முற்காலத்தவர் பேரிருளடைந்த சரித்திரமாகிய வனத்தில் நுழைவதற்கு பாஷைகளின் வரலாறும் அவற்றின் ஸ்வரூபமும் ஆலோசித்துப்பார்த்தால் பேரொளியாயும் பெருங்கருவியாயும் இருக்கும் என்பதற்குஐயமில்லை.

இவ்வுலகில் ஒவ்வொருதேசங்களிலும் அவற்றினுள் ஒவ்வொரு நகரங்களிலும் வெவ்வேறுவித உச்சரிப்பும், வெவ்வேறுவித இலக்ஷணங்களும், வெவ்வேறுவித நடையும் பெற்று ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறாய் நிலைபெற்று எண்ணிறந்த பாஷைகள் உலாவி வருதலை அறியாதவர் ஒருவருமிலர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் உலகில் இவ்வளவு பாஷைகள் உண்டாகி ஆங்காங்கு உலாவிவருவதற்குத் தகுந்த காரணங்கள் இவையாகும் என்று நாம் இப்பொழுது ஆலோசித்துப்பார்த்தால் பலவகைக்காரணங்களும் அவற்றில் சில ஆசங்கைகளும் நமக்குப் புலப்படும்.

(1) இவ்வண்டங்களைச் சிருஷ்டித்த பரமாத்மா தம்மால் படைக்கப்பட்ட ஜனங்களின் உபயோகத்திற்காகப் பாஷைகளையும் அவர்களுடன் கூடவே ஆதியில் சிருஷ்டித்திருக்கலாமா? அல்லது

(2) அப்பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்களே! தம்முடைய வியவகாரங்கள் ஓர் பாஷையையின்றி அமைவது மிகக் கடினம் என்று எண்ணி தமது புத்திக் கூர்மையால் தற்காலம் அநேக கட்டடங்கள் அநேகவித வண்டிகள், பலவிதமார்க்கங்கள், ரயில்வண்டி முதலிய இயந்திரங்கள் இவைகளைக் கண்டு பிடித்ததுபோல் கண்டு பிடித்து வழங்கி வந்தார்களா?

இவற்றுள் முதற்கூற்றே முழுவதும் சரியென வாதிப்பார் சிலர். இவர்கள் இதனை நிரூபிக்கக் கூறும் வாதங்கள் பின்வருமாறு:—பற்பல விசித்ர வஸ்துக்கள் நிறைந்த இப்பூமண்டலத்தில் மனிதன் செய்து கொண்ட பல பதார்த்தங்களைக் காணக்கூடுமாதலால் அவ்வித வஸ்துக்கள் யாவையும் ஒன்றென நாம் நம்பவேண்டியது. அவர்களின் புத்தி மற்றப் பிராணிகளின் புத்தியினும் அதிக நுட்பமுடையதேயாயினும் இப்பேர்க்கொத்த விஷயங்களை சிருஷ்டிக்கும் வல்லமை கடவுளைத் தவிர்த்து மற்றவர்க்குற்றதென ஸ்தாபித்தல் பாபத்திற் கிடமாகும். யாம் கண்டமட்டில் உலகத்தில் அருமையான நூல்களை மிகக்கற்று எங்கும் புகழ்பெற்ற வித்வசிகாமணிகளில் ஒருவரேனும் ஓர் பாஷையைக் கண்டுபிடித்தாரென வழங்கப்பட்டதை நாம் கண்டதுமில்லை. கதைகளிலேனும் மற்றவரெழுதிய சரித்திரங்களிலேனும் கேட்டதுமில்லை. ஆதலால் இப்பாஷையெனினும் சங்கேதம் அநாதியில் உள்ளது என்பதேயாகும், என்றுரைக்கிறார்கள்.

இவர்கள் வாதத்தின்மேல் உண்டாகும் வினாக்களைக் கவனிப்போம்:—

(1) கருணைக்கடலாகிய கடவுளே உலகைப் படைத்து அதிலிருக்கும் ஜனங்கள் தம்முள்ளத்திற்றோன்றும் ஒவ்வொரு அபிப்பிராயங்களையும் பிறருக்குத் தெரிவிக்க வல்லமையற்றவர்கள் என்று உணர்ந்து மிகக் கிருபையுடன் அவர்களுக்கென ஓர் பாஷையை உண்டாக்கக் கருதி, வியவகாரத்திற்கு வேண்டிய எல்லாச்சொற்களும் அடங்கிய ஒரு பெரிய கோசமும், பலவித வேறுபாடுகளமைந்த சொற்களுக் கவசியமான ஓர் இலக்கணமும், வினைப் பகுதிகளைக் குறிக்கும் தாதுமாலையும் தாமே யேற்படுத்தி, பேச்சினாலுண்டாகும பிரயோஜனத்தை ஜனங்கள் அடையவேண்டுமென்று எண்ணி ஆகாயத்தினின்று கீழே விழச் செய்தாரோ?

(2) அல்லது, இப்பெரும்பூமி முதலியவற்றைப் படைத்ததுபோல இந்தப் பாஷையையும சிருஷ்டித்தாரோ?

(3) இதுவும் அவர் ஆதி சிருஷ்டியில் தோன்றியதா?

(4) தாம் ஆதியில் சிருஷ்டித்த சிலருக்கு உலகத்திலுள்ள சாதாரண ஆரியர்கள்போல் பிரமதேவன் என்பவர் முதலெழுத்துமுதல் கடையெழுத்துவரை கற்பித்தாரா? என்பனவாகும்.

இவற்றுள் முதல் வினவும் இறுதிவினவும் ஒன்றும் அறியாத மூடர்கள் ஒப்பத்தக்கவே யொழிய வேறில்லை. ஆனல் இவ்வுலகில் காணப்படும் எல்லா சாஸ்திரங்களும் அதற்குற்ற கோசங்களும், மற்றப்படி பாஷையைச் சார்ந்த அனைத்தும் பகவானுல் சிருஷ்டிக்கப் பட்டதே யென்று உறுதியாய்ச் சொல்வாராயின் அவர்கட்குஇப்பொழுது நமது கண்ணுக்குப் புலப்படும் பெரிய ஆச்சரியமான பூமண்டலமும் மற்றுமுள்ள பிரபஞ்சம் யாவும் நேற்றோ அல்லது ஒரு தினம் முன்னையோ கடவுள் சிருஷ்டித்தார் என்று மறுமொழி கூறலாம். இவ்வாறு உரைத்ததற்கு யாது காரணம் என வினவியவன் அவர்கள் கூற்றிற்கு எது காரணமோ அதுவே காரணமாகும் என்று சொல்லலாம். கடையில் இரண்டும் காரணம் இல்லாத வார்த்தையாய் முடிவதைக் காண்போம்.

இனி இரண்டாவது வினவைப்பற்றி ஆராயின் பதார்த்தங்களை பகுத்தறிவிக்க எழுந்த சாஸ்திரத்தில் பதார்த்தங்கள் ஏழுவகையெனச் சித்தாந்தப்படுத்தியிருப்பதால் இதுவும் வீணவாதமாய் முடியும்.

மூன்றுவதோ! கேள்விக்கு மாத்திரம் இன்பம் பயக்குமன்றி வேறு ஆதாரங்களைக் கொண்டு சாதிக்க முடியாது.

ஆகையால் பொதுநோக்காக ஆராயுங்கால் பாஷையென்பதுஒலிவடிவம் ஆதலாலும், அது குணங்கள் 24 ல் ஒன்றுகலாலும் ஆதிசிருஷ்டியில் சப்தமொன்றையே பரமாத்மா சிருஷ்டித்தல் வேண்டும். அதன் உட்பிரிவான பாஷைகள் அவர்சிருஷ்டியின் அடங்கினவல்ல. அவ்விதம் சங்கேதம் செய்துகொண்டவர்கள் மனிதர்களே யாகவேண்டும் என்று நிச்சயிக்கலாம். "அவனன்றி ஓர் அணுவு மசையாது" என்பது உண்மையாதலால் கடவுளை உண்டுபண்ணினர் என்பது முடிவான சித்தாந்தமாகும். இப்பொழுது பல பரிபாஷா நாமங்களையேற்படுத்திக்கொண்டு வழங்கிவருகிறதை கண்ணுரக் காண்கின்றோம். இதையுங் காரணமாகக் கொண்டு ஆராயுங்கால் பாஷையென்பது மனிதர் ஏற்படுத்திக்கொண்ட ஓர்வகைச் சங்கேதமே யொழிய வேறில்லையென்று நிச்சயமாய்த் துணியலாம்.

(இன்னும் வரும்)

வி. டி. சீனிவாச ஐயங்கார்.

# ஞானபுர உபதேசிகன்.

ஆங்கிலத்தினின்று மொழிபெயர்த்தது.

## 1-வது அத்தியாயம்.

ஞானபுர குடும்பமும், அவர்களின் ஒற்றுமைக் குணமும் செயலும். பிரமசாரியாயிருந்து உலகத்தில் தன்னயங்கருதுதலின்றிப் பொது ஜனங்களுக்கு உபகாரஞ்செய்கிறவனை விட, பாணிக்கிரஹணஞ்செய்துகொண்டு ஒரு பெரிய குடும்பத்தைத் தன் முயற்சியால் காப்பாற்றி வருகிறவன் அதிக பரோபகார சிந்தையுள்ளவனாயிருப்பான் என்பது நான் எப்பொழுதும் கொண்ட சிறந்த கொள்கையாகும். இவ்வபிப்பிராயம், நான் இவ்வுபதேசிகவேலையிலமர்ந்து ஒரு வருஷமாவதற்கு முன்னமே நற்குண நற்செய்கைகளோடு கற்பினின் மிக்குக் கண்ணுக்கின்பமூட்டும் பேரழகுள்ள ஓர் உத்தமியை விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற கவலையை என் மனதிற்குடிகொள்ளும்படி செய்வித்தது. பிறகு மனத்தின் முயற்சியால் எல்லா நற்குணங்களும் சாமுத்திரிகா இலக்ஷணங்களும் பொருந்திய ஓர் பெண்ணரசியை மணமகள் தன் மனதிற்குகந்த கூறைப்புடைவையைத் தானே தெரிந்தெடுத்ததுபோல் நான் தேர்ந்தெடுத்து என் பிரிய நாயகியாக்கிக் கொண்டேன். இப்பேரழகியைப் பற்றிப் பக்ஷபாதமின்றிப் பேசுவேனாயின் யாவரும் வியக்கத்தக்க நற்குண சாலியென்று சொல்ல மாட்டுவேன். ஒழுக்கத்திலோ இவளை ஒப்பாரும் மிக்காரும் காண்பதரிது. ஆங்கில நூல்களை அதிகமாய் எழுத்துக்கூட்டாமல் அழகுடன் வாசிப்பாள். அட்டிற்றொழில் வன்மையிலும், சாமான்களைச் சாவதானமாய் வைத்துக் கொள்வதிலும் இவளைக்காட்டிலும் மேற்பட்டவர்கள் இல்லை. இவள் வருவாய்க்குத்தக்க வாழ்க்கை செய்தல்முதலிய கிருககிருத்தியங்களில் சிறந்த கெட்டிக்காரி. ஆனால் இச்சாமர்த்தியத்தினால் நாங்கள் பணக்காரராவேனும் என்பது மாத்திரம், புனைந்துரையாக முடியும்.

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு."

என்றபடி நாங்கள் ஒருவரை யொருவர் நினைக்குந்தோறும் காணுந்தோறும் மகிழ்ச்சி செய்யும் இடைவிடா உள்ளன்போடு ஒருவரை யொருவர் நேசித்தோம். எங்கள் நேசம் வளர்பிறைச்

சந்திரனைப்போல் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. லௌகிக விஷயங்களைப்பற்றி ஒருவரையொருவர் கோபமூட்டும் விஷயங்கள் எங்களில் ஒன்றும் ஏற்படவில்லை. அக்கம் பக்கம் நிறைந்த நேர்த்தியான குக்கிராமத்தில் சிறந்த வீடு ஒன்று எங்களுக்குண்டு. எங்கள் நிலங்கள் தேசகலகங்களினால் அழிந்து விடும் என்றபயம் ஒன்றுமில்லை. தினந்தோறும் நெற்றி வேர்வை நிலத்தில் வடிய உழைத்துத்தான் உண்ணவேண்டுமென்பது மில்லை. இவ்வருஷம் செல்வம் நிறைந்த உறவினர்களைக் காண்பதிலும், தரித்திரரை வறுமையினின்று நீக்குவதிலும், விநோதமாய்ப் பொழுது போக்குவதிலும் கழிந்தது. எங்கள் துணிந்த செய்கைகளும் தந்திரங்களும் வீட்டிற்குள்ளேயெ ஏற்பட்டிருந்தன. நாங்கள் அந்நிய நாட்டுக்குப் பிரயாணஞ் செய்வது ஒருமண்டபத்தி லமைக்கப்பட்ட நீலப்படுக்கையிலிருந்து சிவப்புப்படுக்கைக்குப் போவது போலுமாகும். ஆகையால் நாட்டு வளப்பமறியாத கிணற்றுத் தவளைபோலிருந்தோம்.

நாங்கள் சாலையின் அருகில் வசித்ததினால் அவ்வழியிற் செல்லும் வழிப்போக்கர்களும் அயலார்களும் எங்கள் வீட்டுக்கு விருந்தாக வந்து பிரசித்திபெற்ற திராக்ஷரச மதுவைத்திருப்தியாகப் பருகுவார்கள். இம்மதுவை இதுவரை எவரும் குறை கூறினதில்லை என்பதைச் சரித்திரலிகிதன் உண்மையோடு கூறுவேன். எங்கள் வம்சபரம்பரையில் வந்த உறவினர்களில் அநேகர் எங்களைச் சந்தோஷப்படுத்த அடிக்கடி கஷ்டமில்லாமல் சுலபமாய் வந்து சந்திப்பார்கள். நாங்கள் கூன், குருடு, நொண்டி முதல் எல்லோரையும் பாதுகாத்ததினால் உறவினர்கள் எங்களிடம் இவ்வளவு சொந்தம் பாராட்டினார்கள்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏல்ர்
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையோம் என்பர் சிலர்" என்றிருப்பதால் இப்பாராட்டுதலை நான் மிக அலக்ஷியமாக நினைத்தேன். ஆனால் நாங்களெல்லோரும் ஒரிரத்தக்கலப்பினராயிருந்தமையால் என் மனைவி அவர்கள் அனைவரையும் நம்முன் ஏகபந்தி போஜனம் செய்விக்கவே

ண்டுமென்று என்னை வற்புறுத்துவாள். அதனால் எங்களுக்குப் பணக்கார விருந்தினர்கள் இல்லாதபோதிலும் எங்களிடத்தில் பரிபூரண அன்பும் ஆநந்தமும் கொண்ட சிநேகிதர்கள் அநேகர் இருந்தனர். விருந்தினர் எவ்வளவுக் கெவ்வளவு ஏழையோ அவ்வளவுக்கவ்வளவு விருந்தில் ஆநந்தமுறுவார் என்பது என் தீர்மானம். சிலர் பூவாசம் பூவின் வர்ணங்களையும், வண்ணாரப்பூச்சிகளின் சிறைகளையும், ஆச்சரியத்தோடு உற்று நோக்குவதுபோல விருந்தினரின் ஆநந்த முகங்களைப்பார்ப்பதில் இன்பமும் ஆசையும் ஆச்சரியமும் கொள்வது என் இயற்கை. எங்கள் அதிதிகள் எப்பொழுதாவது கெட்ட நடத்தை யுள்ளவர்களாகவாவது அதிகப் பிரசங்கிகளாகவாவது எங்கள் மனதிற்குப் பிடியாதவர்களாகவாவது இருந்தால் அவர்வீட்டை விட்டுப்போகுங்கால் ஒரு ஜோடி பாதரக்ஷையாவது சொற்பவிலையுள்ள குதிரையாவது அவருக்குக் கடன் கொடுக்கத்தயாராயிருந்தேன். அவர் அவைகளைத் திருப்பிக்கொடுக்க எப்பொழுதும் வராமல் இருப்பதில் மிகுந்த திருப்தியடைந்தேன். இதனால் எங்களால் விரும்பப்படாதவர்கள் எங்கள் வீட்டுக்கு எஞ்ஞான்றும் வருகிறதில்லை. ஆனால் ஞானபுர குடும்பம் வழிப் போக்கனையாவது எளியாரையாவது ஆதித்யஞ் செய்யாமல் வீட்டை விட்டு வெளியில் துரத்தியதே யில்லை.

இங்ஙனம் அநேகவருஷம் களிபெருவகையுடன் காலங்கழித்துவந்தோம். ஆனால் மூவகைக் காரணங்களுள் ஆதிதெய்விகத்தால் ஏற்பட்ட சிலதுன்பங்கள் இல்லையென்று நான் மறுக்கவில்லை. பள்ளிக்கூடமாணவர்கள் என் தோட்டத்திற் புகுந்து உருசியாயுள்ள பழங்களைத்திருடிக்கொண்டு போய் விடுவார்கள். குழந்தைகளும் பூனைகளும் என் மனைவி செய்த தின்பண்டங்களைத் தெரியாமற் கொள்ளை யடித்துக்கொண்டு போய்விடும். எங்கள் ஜமீந்தார் சிலவேளைகளில் என் உபதேசங்களில் மனதையுருக்கும் விசேஷமான பாகங்களில் உறங்கி விடுவார். அவன் மனைவி என் மனைவியால் செய்யப்பட்ட வந்தனைக்குச் சரியான பிரதி வந்தனம் புரிதலின்றி தலையசைத்தலாகிய பிரதிவந்தனத்தைச் செய்வாள். இதனால் ஏற்பட்ட வருத்தங்களினின்றும் நீங்கி நாலுநாள் ஆனதும் முன் வருத்தத்தையுண்டாக்கியதின் ஹேதுவை நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டோம்.

தன்னடக்கம் நிறைந்த என் செல்வச்சிறார்கள் சன்மார்க்கத்தில் நன்றாய்ப் பயிற்றப்பட்டதினால் சுறுசுறுப்பாயும், பலமாயும், சுகமாயும், நன்றாயும் இருந்தார்கள். பெண்கள் முகமலர்ச்சியுடனும் இயற்கையழகுடனும் திகழ்ந்தார்கள் வார்த்திகதிசையில் என்னைகாப்பாற்றத்தக்க இக்குழந்தைகளின் நடுவண் நான் நிற்கும் பொழுது இரண்டாவது ஹென்றி அரசன் ஜெர்மனிதேசப் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும் பொழுது மன்னனின் மற்றத்தோழர்களனைவரும் அளவிடமுடியாத பொக்கிஷங்களை அரசனுக்கு வெகுமதியளிக்கத் தன்னால் கொடுக்கக்கூடிய எல்லாவற்றினும் சிறந்த தன் 32 பிள்ளைகளையும் வெகுமதியாக அளித்த ஆமென்ஸ்பர்க் துரைமகளின் கதையை நினையாமல் இருக்கமுடியாது. என் ஆறு செல்வங்களையும் தேச க்ஷேமத்தின் பொருட்டு அளிக்கப்பட்ட அபூர்வமான வஸ்துக்களென்றே நினைத்தேன். இதனால் தேசத்திற்குச் செய்யவேண்டிய பொதுக்கடமையை நான் செலுத்தியதாகவும் எண்ணிக்கொண்டேன். தன் பிதிரார்ஜிதமான பதினாயிரம்பவுனையும் எங்களுக்கு வைத்துத் தேகவியோகமடைந்த இவள் மாமனின் ஞாபகார்த்தம் ஜார்ஜ் என்னும் பெயரையே ஜேஷ்டனுக்குப் பெயராகவைத்தேன். அத்தையின் பெயராகிய கிரீச்வரி என்னும் பெயரை என் இரண்டாவது புத்திரிக்குப் பெயராக வைத்து அழைக்கவேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் விசித்திரக் கதைகள் வாசித்துக் கொண்டிருந்த என் காதலி அவளை ஆலிவியாள் என்று கூப்பிடவேண்டுமென்று என்னை வற்புறுத்தினாள். மறுவருஷத்தில் எங்களுக்கு மற்றொரு புத்திரி ஜனித்தாள். இவள் கிரீசுவரி என்னும் பெயர் பெறுவாள் என்று தீர்மானித்திருந்தேன். ஆனால் எங்கள் தனவந்த பந்துக்களில் ஒருத்தி இவளுக்கு ஞானத்தாயாயிருக்க நிச்சயித்துத் தன் பெயா வைக்கவேண்டுமென்று தூண்டியதால் ஸோபையாள் என்று பெயர் வைக்கப்பட்டது. ஆகையால் இவர்கள் இருவரும் எங்கள் குடும்பத்தில் விசித்திரப்பெயர் உள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் இதற்கு இடங்கொடுத்த குற்றம் என்னுடையதல்ல என்று நிச்சயமாய்ச் சொல்வேன். அடுத்த புத்திரன் பெயர் மோஸஸ். பின் 12 வருஷம் கழித்து இரண்டு பிள்ளைகள் பிறந்தனர்.

என் அருமைச் சிறுகுழந்தைகளை என் பக்கத்தில் பார்க்கும்பொழுது நிறைந்தபொன்னையும் புகழையும் உடையவருடைய சந்தோஷத்தை யடைவேன். ஆனால் தேவராணியின் மமதையும் திருப்தியும் என் சந்தோஷத்தைவிட அதிகமாயிருந்தன. எங்கள் அதிதிகள் பங்கஜத்தைப் (Primrose) பார்த்தும் "இந்நகரில் நீ ஒருத்திதான் நேர்த்தியான குழந்தைகளை உடையாய்" என்றால் அவள் "கடவுள்படைத்த வடிவழகுக்குத்தக்கபடி நற்குண நற்செய்கையைகளையுடையவரா யிருக்கவேண்டும்" "நற்குணஅழகு நல்லவர்க்கழகு என்றபழமொழியும் இருக்கிறது" என்றுமறுமொழிபகர்வாள். அடுத்தக்ஷணத்தில் தன் குழந்தைகளைப் பார்த்து "நிமிர்ந்து கம்பீரமாக வீற்றிருங்கள்" என்று சொல்வாள். அவர்களை அப்பொழுது பார்த்தால் மிகவும் அழகுள்ளவர்களென்றே எவரும் நினைப்பார்கள். இவ்வூரில் இவ்விஷயம் பலர் சம்பாஷணைக்கு முக்கிய விஷயமாயிருந்ததால் ஆடம்பரங்க ளமைந்த வெளிப்பார்வை யழகைக் கொஞ்சமும் மதியாத நான் இதை ஆலோசித்துச் சொல்லும்படி நேர்ந்தது. இப்பொழுது பதினெட்டாட்டைப் பருவத்துத் தருணியாகிய ஆலவியாள், ஓவியர் உவந்து சித்திரிக்க விரும்பும் பேரழகுள்ள கந்தர்வதேவதையைப்போல் கம்பீரப்பார்வையும் பிரசன்னமுகமும் பேரழகும் உடையவளாயிருந்தாள். ஆரம்பத்தில் சோபையாவின் சாயல்கள் அவ்வளவு ஆச்சரியப்படத்தக்கனவா யில்லாவிடினும் தகுந்தபருவம் வந்தவுடன் நிறைந்த அழகுடையவளாயும் "பெற்றியின் நின்றிடிற் பேடியரன்றே" என்றபடி யாவரையும் மயக்கத்தக்கவளாயும் இன்சொல் மரியாதைமுதலிய நற்குணங்கள் அமைந்தவளாயும் விளங்கினாள். மற்றவளோ முதலில் இருந்த அழகிற் குறைவுபடாதவளா யிருந்தாள்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" என்றபடி பொதுவாய் ஒருவர் முகச்சாயல்களிலிருந்து அவர்களின் குணமும் இத்தன்மையுடைய தென ஒருவாறு அறியலாம். உலகத்தில் எங்ஙனமாயினும் என் புத்திரிகள் விஷயத்தில் இது ஒத்து இருந்தது. ஆலிவியாள் தன்னை நேசிக்கும் பல நேசர்களைக் காதலித்தாள், பிறரைச் சந்தோஷிக்கச் செய்ய அதிக பாசாங்கு செய்தாள். மற்றையவள் ஒருவனை

நம்பி ஒரு மனமாயிருக்க விரும்பினாள். "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு." என்றபடி பயந்து அதிக ஆடம்பர ஆரவாரங்கள் இல்லாமல் நாவடக்கமுள்ளவளாயிருந்தாள். ஆலிவியாள் நான் சந்தோஷமாயிருக்கும் பொழுது அவளுடைய உல்லாசத்தினால் என்னை உற்சாகப்படுத்தினாள். கனிஷ்டை நான் கவலைகொண்டிருக்குங் காலையில் தன் புத்தி சாதுரியத்தால் என்னை மகிழ்ச்சி செய்தாள். ஆனால் இவ்வித குணங்கள் ஒருவராலும் கற்பிக்கப்படவில்லை. இவர்கள் 'ஒருவரையொருவர் புகழ்ந்து பேசிக் கொள்வதையும் அடிக்கடி பார்த்திருக்கிறேன். தன் நண்பன் மரணத்தால் ஏற்பட்ட துக்கக்குறி காட்டும் உடுப்புகள் மினுக்காயுள்ள ஆலிவியாளை தனியளாகவும் துக்கமுகியாகவும் இருக்கச் செய்து விட்டன. ஓர் புதிய ஜோடி மேகலை யாபரணங்கள் சோபையாளுக்கு எப்பொழுதும் இல்லாத மினுக்கையும் தளுக்கையும் உல்லாஸத்தையும் ஏற்படுத்தின. என் ஜேஷ்டனை அறிவுடையவர் வசிக்கும் உயர்ந்த பதவியை அடைவிக்க என்மனம் விரும்பியதால் அதற்குச் சாதகமான ஆக்ஸ்போர்ட் கலாசாலையில் கல்வி கற்கச் செய்தேன். மோஸஸை வியாபாரத்திற் செலுத்த விரும்பியதால் அதற்குச் சாதகமான அநேக விஷயங்களை வீட்டிலேயே போதித்தேன். நிறைந்த உலக அனுபவமில்லாத இச்சிறுவர்களின் முக்கிய குணங்களை விவரிப்பது அனாவசியம். சுருங்க வுரைப்பின் என் குடும்பத்திலுள்ள எல்லாரிடத்திலும் ஒரு நிகராக அநேக நற்குணங்கள் நிறைந்திருந்தன. எல்லா உயிர்களிடத்திலும் அன்புள்ளவர்களாகவும், பாபவழியிற் பேதமையுள்ளவர்களாகவும், தன்னயம் கருதாதவர்களாகவும் சூதில்லாதவர்களாகவும், பிறருக்கு எவ்விதத்திலும் வருத்தம் கொடாதவர்களாகவும் ஒவ்வொருவரும் அந்யோந்யமாய் வாழ்ந்து வந்தார்கள்.

வி. டி. சீனிவாச ஐயங்கார்.

# சமாசாரக்கொத்து.

மேலைச்சிவப்பட்டி சன்மார்க்கசபையின் நான்காம் வருட பூர்த்திக் கொண்டாட்டம்:—புதுக்கோட்டை ஸ்டேட்டிலுள்ள மேலைச்சிவப்பட்டி யில் சிவபிரான் திருவருளால் நடைபெறுகின்ற சன்மார்க்கசபையின் நான்காம் வருட நிறைவேற்றக் கொண்டாட்டம், நிகழும் பிரமாதீசஞ சித்திரைமீ 18உ தொடங்கி 20உவரை (30-4-13. முதல் 2-5-13.வரை) சிறப்புற நடைபெற்றது. ஒவ்வொரு தினத்திலும் நாட்டுக்கோட்டை வைசியப்பிரபுக்களும் வித்துவான்களும் ஏனைய நண்பர்களும் 700 பெயர் வரை கூடினார்கள், அவரவர்கள் தகுதிக்கேற்ப உணவு முதலிய சௌகரி யங்கள் சபையாரால் செய்து கொடுக்கப்பட்டன. வித்துவான்கள் தங்கு தற்குப் பூர்வகாலத்து ஆச்சிரமங்கள் போற் பல பர்ணசாலைகள் அமைக்கப் பெற்றிருந்தன. எப்பிரல்மீ 29உ மாலையில் சபையார் வேண்டுகோட்படி அக்கிராசனமேற்ப வந்திருந்த திருநெல்வேலி வித்துவான் ஸ்ரீமத், S. பால் வண்ணமுதலியாரவர்களையும் மற்றப் பண்டிதர்களையும் வேந்தன்பட்டிச் சிவன் கோயிலிலிருந்து சபையன்பர்களும் பிறரும் மேளவாத்தியம் ஒலிப்ப எதிர் கொண்டழைத்துவந்து அவரவர்க்குரிய தங்குமிடங்களிற் சேர்த்தனர். 30உகாலையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜையும் புராண படனமும் நடைபெற்றன. மாலை 3 மணிமுதல் 8 மணிவரை சபை நடைபெற்றது. முதலில் திருநெல்வேலி வித்துவான் ஸ்ரீமத் S. பால்வண்ணமுதலியாரவர் கள். அக்கிராசனத்தமர்ந்ததும் ஸ்ரீமத் சீதாராமபாகவதரவர்களால் கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. பின் அக்கிராசனாதிபதி அவர்களுக்கு ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் வந்தனோபசாரப்பத்திரம் வாசித்தனர். தலைவர் முன்னுரை கூறினர். காரியதரிசி ஸ்ரீமத் குமரப்பசெட்டியாரவர் களால் சபையின் நான்காம் வருடத்து அறிக்கைப் பத்திரம் படிக்கப் பெற் றது. அதனைப்பற்றி ஆ. தெற்கூர் ஸ்ரீமத் கரு. முத்து. அழகப்பசெட்டியா ரவர்களும் தலைவரவர்களும் அபிப்பிராயங் கூறினார்கள். சபைக்கு வரக் கூடாமையைத் தெரிவித்துச் சபையின் அபிவிருத்தி கருதி வித்துவான் களும் பிரபுக்களும் அனுப்பிய கடிதங்களும் தந்திகளும் படிக்கப்பட்டன. சோளங்கிபுரம் சைவசித்தாந்த சரபம் ஸ்ரீமத், சிவ. அருணகிரிநாதமுதலியா ரவர்கள் "சிவசப்தமகிமை" யென்னும் விஷயத்தையும் ஸ்ரீ மு. குமரப்ப செட்டியாரவர்கள் "நல்லாரிணக்கம்" என்னும் விஷயத்தையும், சொக்க லிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத், ரெ. இராமமூர்த்திஐயரவர்கள் "செய்ந்நன்றியறிதல்" என்னும் விஷயத்தையும், கனக்காடு ஸ்ரீமத், சத்தியவாகீசுவரஐயரவர்கள். "தருமம்" என்னும் விஷயத்

தையும் நன்கு பிரசங்கஞ்செய்தனர். தலைவர் முடிவுரை கூறினர். மறுநாள் (1-5-13.) காலையில் புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத், V. T. ஸ்ரீநிவாசஐயங்காரவர்கள். "பாஷையின் தோற்றம்" என்னும் விஷயத்தையும் பள்ளத்தூர் தமிழ்க் கலாசாலைப் பண்டிதர் ஸ்ரீமத் சிதம்பர புன்னைவனநாதமுதலியாரவர்கள். "கற்பு" என்னும் விஷயத்தையும், வலயபட்டி வித்தியாசாலைப்பண்டிதர் ஸ்ரீமத், திரு. இராமசுவாமி ஐயங்காரவர்கள். "அறிவு" என்னும விஷயத்தையும் நன்கு பேசினர். தலைவர் முடிவுரை கூறினர். அன்று மாலையில் மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர். ஸ்ரீமத், மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள். "கொல்லாமை" யென்னும் விஷயத்தையும், புதுக்கோட்டை காலேஜ் போதகர் ஸ்ரீமத், ஜி. சுந்தரேசுவர ஐயரவர்கள். B. A. L. T. பரோபகாரம் என்னும் விஷயத்தையும், தூத்துக்குடி சைவப்பிரசாரகர் ஸ்ரீமத், பொ. முத்தையபிள்ளையவர்கள். "அத்துவித உண்மை" யென்னும் விஷயத்தையும், சேலம் ஸ்ரீமத் சே. ரா. திம்மப்பையரவர்கள். "தேவார ஆராய்ச்சி" யென்பதனையும், கண்டனூர் ஸ்ரீமத், தெ. அரு. சித.இராமனுதன் செட்டியாரவர்கள். 'ஊழு முயற்சியும்" என்பதனையும், மகிபாலன்பட்டி ஸ்ரீமத்,மு.கதிரேசச்செட்டியாரவர்கள். "சமய சாஸ்திரம்" என்னும் விஷயத்தையும், நன்கு பிரசங்கஞ் செய்தனர். தலைவர் முடிவுரை கூறினர்.

மூன்றாம் நாள் (2-5-13.) காலையில் தமிழகராதி கமிட்டித்தலைவர். மதுரை F. S. சாண்டலர் துரையவர்களுக்குச் சபையார் அழைப்புப் பத்திர மனுப்பியதற்கு, துரை அவர்கள்,சில வேலையால் தாம் வரக் கூடாமையைத் தெரிவித்ததோடு தமது பண்டிதராகிய தமிழ் வித்வான் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்களை வரச்செய்தார்கள். ஸ்ரீமத் ஐயங்காரவர்கள் தமிழகராதி சம்பந்தமாகச் சில விஷயங்கூறினார்கள். சபையிலிருந்த சில வித்வான்கள் அது சம்பந்தமான சில பிரேரணைகள் செய்தனர். தலைவரவர்களால் சில தீர்மானிக்கப்பட்டு ஸ்ரீமத் சாண்ட்லர் துரையவர்களுக்கு அனுப்பப்பட்டன. பின் மதுரை ஸ்ரீமத், கல்யாணசுந்தரபட்டரவர்கள் "சிருஷ்டியின் மகிமையென்னும் விஷயத்தைப்பேசினர். தலைவர்முடிவுரை கூறினர். அன்று மாலையில், மதுரைத்தமிழ், வித்துவான் ஸ்ரீமத், சுந்தரேசுவரய்யரவர்கள் "அன்பு" என்னும் விஷயத்தையும், குளித்தலை வித்துவான் ஸ்ரீமத் அரங்கசாமிஐயரவர்கள் "பதிநிச்சயம்" என்னும் விஷயத்தையும், புதுக்

கோட்டை ஸமஸ்தானம் திவான் பேஷ்கார் ஸ்ரீமத், தர்மரெங்கராஜு அவர்கள் "சத்தியம்" என்னும் விஷயத்தையும், அவர்களுடைய சகோதரரும் கோயமுத்தூர் வியவசாய சங்கத்தலைமை யதிகாரியுமாகிய ஸ்ரீமத், செல்வரங்கராஜு அவர்கள் "வியவசாயப்பெருமை" யென்னும் விஷயத்தையும், மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீமத், மு. ராகவையங்காரவர்கள் "தமிழ்ப்பெருமை" யென்னும் விஷயத்தையும் நன்கு பிரசங்கஞ்செய்தார்கள். தலைவரவர்கள் எல்லா விஷயங்களையுந்தொகுத்து நீண்டதோர் முடிவுரை கூறினார்கள். சபைத் தலைவராகிய ஸ்ரீமாந், வ. பழ. சா. அண்ணாமலைச்செட்டியாரவர்கள் தலைவரவர்களுக்கும் சபையார்க்கும் உபந்யாஸகர்களுக்கும் உரியவாறு வந்தனங்கூறி எல்லோர்க்கும் அலங்காரமான புஷ்பஹாரங்கள் சாத்தினார்கள். பின் சந்தன தாம்பூலங்கள் வழங்கப்பெற்றன. சபைக்கு வந்த எல்லோர்க்கும் உணவு விசாரணையை மிக்க அன்புடன் செய்து கௌரவித்தவர்கள் கோனாபட்டு வைசியமணிகள். இவர்கள் தம் சிரமத்தைப் பொருட்படுத்தாமற் செய்த உபசரிப்பு யாவராலும் பாராட்டப் பெற்றது. அன்று இரவு 9 மணிக்கு இறைவனருளால் சபை நன்கு நிறைவேறியது.

உபந்யாசங்கள் மிக்கிருத்தலால் அவற்றின் விஷயச் சுருக்கம் எழுதவில்லை. சில உபந்யாசங்கள் வியாச ரூபமாக நமது பாநுவில் வெளிவரும்.

* * * *

தூத்துக்குடி சிவாநுபூதிச் சித்தாந்த சங்கத்தின் முதல் வருட நிறைவுக் கொண்டாட்டம்:—இப்பெயரிய சங்கத்தின் முதல் வருஷ பூர்த்தி விழாவானது நிகழும் பிரமாதீச வருஷ சித்திரை மீ 23உ முதல் 25உ வரை 3 நாட்களிலும் சென்னை சிவரகசிய மொழிபெயர்ப் பாசிரியர் ஸ்ரீமாந் சதாசிவச் செட்டியாரவர்கள் பி. ஏ. அக்கிராசனத்தில் மிக்க சிறப்பாக நிறைவேறியது. பல இடங்களிலிருந்து வந்திருந்த பண்டித மணிகளின் மிகச்சிறந்த உபந்யாசங்கள் நன்கு நடந்தன. ஒவ்வொரு தினத்தும் ஷை சங்கத்தின் அங்கத்தினர்களும், சைவசித்தாந்த சபையார்களும் சற்சனர் சபையார் சிவநேசச் செல்வர் சபையார் முதலியவர்களும், உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களுமாகச் சுமார் 500 பேர்வரை கூடினார்கள். உபந்யாசங்களின் ஆதிமத்தியாந்தங்களில் மிக இனிமையான தேவார பாராயணம் நடந்தது. பிற இடங்களி லிருந்துவந்தவர்களுக் கெல்லாம் உறையுளும் உண்டியு முதலிய சௌகர்யாதிகள் யாவும் சங்கத்தாரே நடத்தி யுபசரித்தனர். எல்லா வகைகளிலும் யாதொரு குறைபாடுமின்றி மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வைத்த இறைவன் றிருவருள் நீடு வாழ்க.

நமது பார்வைக்கு வந்த சில புத்தகங்களைப் பற்றிய எமது அபிப்பிராயத்தை அடுத்த பாநுவில் வெளியிடுவோம்.

ஒரு பரோபகாரி காலஞ்சென்றார்:—காரைக்குடி ஸ்ரீமான் மு. ராம. சொ. வீரப்பசெட்டியாரவர்கள் நரம்புநோயால் பீடிக்கப்பட்டு 18—4—13 இரவு 3 மணிக்கு சிவபதமடைந்தனரெனக் கேட்டு மிக விசனிக்கிறோம். இவர்க்கு வயது 24 இருக்கலாம். திரண்ட செல்வமும் இளமையும் செல்வாக்கு முற்றிருந்தும் அகங்காரப் பேயை அணுக வொட்டாமல் துரத்தி சாந்தமும் தயையும் அன்பும்கொண்டு வாழ்ந்திருந்தனர். நல்ல காரியங்கள் எல்லா வற்றிலும் முற்பட்டு நிற்பர். இவர் பிரிவு நமது தமிழ் நாட்டுக்கு மிகவும் நஷ்டமே யாகும். இவர் குடும்பத்தார்க்கு எமது அநுதாபத்தை இதன் மூலம் தெரிவிக்கிறோம். மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையார் இவர் பிரிவை 1—5—13ல் தந்திமூலமுணர்ந்து மிக வருந்தியதுடன் சபையில் இவரது நற்குண நற்செயல்களைப் பாராட்டிப் பேசி யநுதாபங் காட்டினர்.

* * *

ஆநந்த ஔஷத சாலை:—புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஆஸ்பிடல் அஸிஸ்டெண்டாக இருந்து பென்ஷன் பெற்றிருக்கும் ஸ்ரீமாந் வேணுகோபால நாயுடு அவர்கள் புதுக்கோட்டைக் கஸ்பாவில் ஆநந்த ஔஷத சாலை யெனப் பெயரிட்டு ஒரு வைத்தியசாலை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவர்கள் ஆங்கில வைத்தியம் தமிழ் வைத்தியம் இரண்டிலும் மிகத் தேர்ந்தவர்கள். வைத்தியர்கட்கு இன்றியமையாதனவாகிய இன்முகம் இன்சொல் இரக்கம் நன்முயற்றல் முதலிய நலங்கள் யாவும் ஒருங்கே யமையப் பெற்றுள்ளவர்கள், பொது ஜனோபகார சிரத்தை யுடையவர். தமிழபிமானமிக்கார். ஏழைகளுக்கு இலவசமாகவே மருந்தும் உணவும் கொடுத்துப் பரிபாலிப்பவர். இவர்களது சிறந்த நற்குண நற்செயல்களையும், வயித்தியத்திறமையையும் நாம் நேரில் நன்கு தெரிந்துள்ளோம். மிகக் கடின வியாதியுற்று வருந்திய எமது நண்பர் சிலர் இவர்களது வைத்தியத் திறமையால் வியாதி நீங்கிச் சுகம் பெற்று வாழ்கின்றார்கள். இத்தகைய உத்தமர்கள் செய்யும் நன்முயற்சிகள் மேலோங்கச் செய்தல் நம் நாட்டுத் தனவான்களின் முக்கிய கடமையேயாம்.

* * *

திருப்பரங் குன்றம் தர்மகர்த்தர்கள் கவனிக்க வேண்டியது:—வைகாசி விசாகத்தில் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு அநேக அடியார்கள் வந்து பாலபிடேகஞ் செய்விக்கின்றனர். பால் பெருக்கெடுத்து ஓடுகிறது. தரிசனைக்கு வருபவர்கள் எல்லாரும் காலினால் மிதித்துச் சேறுசெய்யும்படி நேராமல் யாதானுமோர் தொட்டிகட்டி பாலை அப்புறப்படுத்தும்படி ஏற்பாடுசெய்தல் வேண்டும். கோயிலுக்குச்

சென்று புண்ணியந் தேடுதற்குப் பதிலாக சுவாமிக்கு அபிஷேகமான பாலை மிதிப்பதால்வரும் பாவம் தேடும்படி நேர்வது பரிதபிக்கத்தக்கதே. இதைக்கவனிக்குங் கடமை தர்மகர்த்தர்களுக்கே யுரியது. இனியாவது கவனிப்பார்களாக.

*　　　*　　　*

ஞானபாநு:—இப்பெயர் கொண்ட மாதாந்தப் பத்திரிகையொன்று சென்னை மைலாப்பூரினின்று நிகழும் பிரமாதீச-ௗ சித்திரை-மீ முதல் வெளி வருகின்றது. இதன் நோக்கம் புருஷார்த்தங்களைப் பயக்கும் ஒழுக்கம் கல்வி தவம் ஞான முதலியவைகளைப் போதித்தலாம். இதன் முதல் தொகுதி முதல் பகுதி நமது பார்வைக்கு வந்தது. இதில் விஷயம் எழுதுபவர்கள் ஸ்ரீ-சுப்பிரமணிய சிவம் அவர்கள். ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், ஸ்ரீ-ஸி. சுப்பிரமணியபாரதியவர்கள், ஸ்ரீ-எம். ஸி. நஞ்சுண்டராவ் அவர்கள் பி. ஏ. எம். பி. ஸி. எம். எப். ஸி. எஸ். கௌரவ ஸ்ரீ-பி. கேசவ பிள்ளையவர்கள். இப்பாநு நீடுவாழ்க. இதன் ௗ-சந்தா ரூபா 1-12-0 தான்.

*　　　*　　　*

இரங்கூனில் கால்நடைகளை இன்ஷ்யூர் செய்தல்:—இரெங்கூனில் பர்மா ஷான் லைவ்ஸ்டாக் கம்பெனி லிமிட்டெட் என்ற பெயரால் 5 லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பெனியில் குதிரை, மட்டக்குதிரை, பசு, நாய் பொதுவாய் விவஸாயிகளின் மற்றஜீவப்ராணிகள் எல்லாவற்றையும் இன்ஷ்யூர் செய்யலாம்.வை-மி.

*　　　*　　　*

மாமிசத்துக்கு பதில் மரக்கறி:—விவசாய நிபுணர்கள் மாமிசத்தின் குணங்கள் பொருந்திய ஒரு புதிய பழத்தைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்பழம் மெக்ஸிகோ தேசத்தில்-அவோகடோ என்னும் ஒருவித மரத்தில் உண்டாகிறதாம். அப்பழம் ஒன்றைப் புசித்தாலே சாதாரணமாக ஒரு மனிதனுக்கு வேண்டிய ஆகாரமாகுமாம். மெக்ஸிகோ தேசத்து ஜனங்கள் இப்பழத்தையே ஆகாரமாகப் புசிக்கிறார்களாம். அப்பழங்கள் போதுமான அளவு கிடைத்தால் உலகில் மாமிசம் தின்பதற்கு அது பிரதியாகும் அம்மரம் எங்கும் விஸ்தாரமாக பயிரிடாதபடியால் அதைப்பற்றி ஜனங்களுக்கு அதிகமாகத் தெரிவதில்லை.—வை-மி.

பத்திராதிபர்.